# ஆய்வுச் சுருக்கம்

வலிகாமம் கல்வி வலய வகை 1AB பாடசாலைகளின் உள்ளக மேற்பார்வையின் விளைதிறனை மதிப்பிடல் என்கின்ற பிரதான நோக்கத்தை அடைவதற்காக நான்கு ஆய்வுக் குறிக்கோள்களும் 20 ஆய்வு வினாக்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வானது தொகை மற்றும் பண்பு சார்ந்த ஆய்வு அணுகு முறையையும், அளவை ஆய்வு வடிவத்தையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வு வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள வகை1AB 14 அரசபாடசாலைகளிலிருந்து 14 அதிபர்கள், 14 பிரதி அதிபர்கள், 14 உப அதிபர்கள், 14 பகுதித்தலைவர்கள், 44 ஆசிரியர்கள் ஆகியோர் எளிய எழுமாற்று விகிதப்படையாக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டனர். அதிபர்கள், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள் ஆகியோரிடமிருந்து லிக்காட்டின் அளவுத்திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்ட கட்டமைக்கப்பட்ட மூடிய வினாக்கொத்துக்கள் மூலம் தரவுகள் திரட்டப்பட்டன. ஆசிரியர்களிடமிருந்து நேர்காணல் மூலமும் தரவுகள் திரட்டப்பட்டன. இரண்டாந்நிலைத்தரவுகள் ஆவணப்பகுப்பாய்வு மூலம் திரட்டப்பட்டன. ஆய்வுக்கருவிகள் மூலம் திரட்டப்பட்ட தரவுகள் யாவும் தொகை சார்ந்த தரவுகளாக மாற்றப்பட்டு பகுப்பாய்வு செயற்பட்டு அட்டவணைகள் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ் ஆய்வின் பிரதான கண்டுபிடிப்புக்களாவன பாடசாலை உள்ளக மேற்பார்வைத் திட்டங்கள் தயாரிக்கப்படும் போது ஆசிரியர்களின் ஆலோசனைகள் பெறப்படவில்லை, மேற்பார்வைக்கு பாடவேளைகள் ஒதுக்கப்பட்ட போதும் அது தொடர்பான பூரணவிளக்கம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை, மேற்பார்வைக்குழுவினருக்கும் ஆசிரியர்களுக்குமிடையில் போதிய இடைவினை காணப்படவில்லை, மேற்பார்வைக் குழுவிற்கு கல்வியதிகாரிகள் போதிய ஆலோசனை வழங்கவில்லை, அக்கறையுடன் செயற்படுவதில்லை, உள்ளக மேற்பார்வை செயற்பாடுகள் விளைத்திறன் மிக்கதாக அமையவில்லை. இவ் ஆய்வின் விதப்புரைகள் மேற்பார்வைத்திட்டம் தயாரிக்கப்படும் போது ஆசிரியர்களினது ஆலோசனைகளைப் பெறுதல், மேற்பார்வையை வலுப்படுத்துவதற்கு கல்வி அதிகாரிகள், அதிபர்கள் இணைந்து ஆசிரியர்களுக்கு பயிற்சிகள், வழிகாட்டல்கள், ஆலோசனைகள் வழங்குவதன் மூலமும் மேற்பார்வைக் குழுவினருக்கு விழிப்புணர்வையும் ஊக்குவிப்பையும் வழங்குவதன் ஊடாகவும் விளைதிறன் மிக்க உள்ளக மேற்பார்வையை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தி பாடசாலைகளை வினைத்திறனுடன் செயற்படச் செய்து நல்ல விளைதிறனைப் பெற முடியும்.



திறவுச் சொற்கள் : பாடசாலை மட்ட உள்ளக மேற்பார்வைத்திட்டம், மேற்பார்வைக்குழு, விளைதிறன், ஊக்குவிப்பு, இடைவினை, வலுப்படுத்தல்.

# Abstract

Achieve the main objective of evaluating the effectiveness of internal supervision of Valikamam 1AB schools, Four research objectives and 20 research questions were designed by myself. The research was conducted using a quantitative and qualitative research approach and a quantitative research format. In this research, 14 principals, vice-principals, 14 sectional heads and 44 teachers from Type 1AB government schools in Valikamam Education Zone were selected through a simple transcendental ratio system. Data were collected from principals, deputy - principals, vice-principals, and sectional heads through structured closed questionnaires prepared according to Licott's scale. Data were also collected through interviews with teachers. Secondary data were collected through document analysis. All the data collected by the research tools are converted into quantitative data and analyzed and presented in tables.

Through this research I found when they prepare school internal supervision they did not get any advice from teachers and also the subject period were allotted for internal supervision, but the teachers were not given a complete explanation. There was not enough interaction between the supervisory group and the teachers, Directors of Education department do not provide adequate advice to the supervision group, internal supervision Internal supervision activities are not effective. In this research I suggested to get the teachers' advice when preparing a supervision plan. Education officials, along with principals, provide training, guidance, and counseling to strengthen supervision, and by providing awareness and encouragement to the supervision team Good effectiveness can be achieved by implementing effective internal supervision in schools and making schools function efficiently.



Key words :- Internal supervision scheme of schools, Internal supervisor, Interrelationship, Effective, Empowerment and encouragement.